**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **18.09.2026**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# ஆராய்ச்சியை வணிகப் பொருட்களாக மாற்றும் PPP முறையிலான தொழில்நுட்ப வளர்ச்சியை ஆராய்ந்த சர்வதேச கல்வியியல் பிரதிநிதிகள் COXBIT–க்கு வருகை

கோயம்புத்தூர், 17 செப்டம்பர் 2026: கொரிய குடியரசின் Daejeon, Seo–gu பகுதியில் உள்ள Konyang University–யின் Institute of Educational Innovation, Department of Medical IT Engineering இயக்குநர் பேராசிரியர் Song Ki Won மற்றும் கோயம்புத்தூர் Sri Shakthi Institute of Engineering and Technology (Autonomous)–ன் தலைவர் முனைவர். S. தங்கவேலு ஆகியோர், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் Centre of Excellence in Biotechnology (COXBIT)–க்கு வருகை தந்தனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரும் பொறுப்பு துணைவேந்தருமான முனைவர். மு. ரவீந்திரன் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார். பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்கள், தொழில்நுட்பப் புத்தாக்கங்கள் மற்றும் தொழில்துறை மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

இந்த வருகையின்போது, COXBIT உடன் இணைந்து செயல்பட்டு வரும் நிறுவனங்களின் ஆராய்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் குறித்து அவர்கள் கலந்துரையாடினர்.

Home Idea Technologies நிறுவனத்தின் நிறுவனர், செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான குரல் வழிக் கல்வி பயன்பாடுகளுக்கான (Voice–Assisted Educational Applications) தயாரிப்பு மேம்பாடு குறித்த தங்களது ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பணிகளை விளக்கினார். கல்வித் துறையில் குரல் வழித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி AI அடிப்படையிலான தீர்வுகளை உருவாக்கும் பணிகள் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

Nithilam Tech நிறுவனம், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரக் கற்றல் (ML) அடிப்படையிலான பயிர் ஆலோசனைத் தீர்வுகள் மற்றும் ட்ரோன் மூலம் வேளாண் படங்களைப் பகுப்பாய்வு செய்யும் தொழில்நுட்பம் குறித்து விளக்கியது. வேளாண் படங்களை AI/ML மாதிரிகள் மூலம் பகுப்பாய்வு செய்து, பயிர் சார்ந்த முடிவெடுப்புகளுக்கு உதவும் தொழில்நுட்ப மேம்பாடுகள் குறித்து நிறுவனம் எடுத்துரைத்தது.

Coimbatore AI நிறுவனம், வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தயாரிப்பு மேம்பாட்டுப் பணிகள் குறித்து விளக்கியது. இத்துறைகளில் AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு வரும் தீர்வுகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

Mitti Lifetek Pharmadx Private Limited என்ற உயிரித் தொழில்நுட்ப தொடக்க நிறுவனம், காசநோய் (Tuberculosis – TB) கண்டறிதலுக்கான மூலக்கூறு நோயறிதல் (Molecular Diagnostics) தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை விளக்கியது. TB–க்கான மூலக்கூறு நோயறிதல் கருவியின் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நோயைக் கண்டறிவதில் அதன் பயன்பாடு குறித்து நிறுவனத்தின் குழுவினர் விளக்கமளித்தனர்.

இந்த கலந்துரையாடல்கள் மூலம், COXBIT சூழலமைப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்கை நுண்ணறிவு, வேளாண்மை, குரல் வழிக் கல்வி, ட்ரோன் அடிப்படையிலான படப் பகுப்பாய்வு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் மூலக்கூறு நோயறிதல் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் எடுத்துக்காட்டப்பட்டன.

COXBIT, TNAU இயக்குநர் முனைவர். ந. செந்தில் COXBIT–ன் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். Public–Private Partnership (PPP) முறையின் மூலம் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைக்கு இடையேயான இணைப்பை (Academia–Industry Connect) வலுப்படுத்துவது COXBIT–ன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என்று தெரிவித்தார்.

கல்வி நிறுவனங்கள், தொழில்துறை நிறுவனங்கள், தொடக்க நிறுவனங்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புத்தாக்க சிந்தனையாளர்களை ஒருங்கிணைத்து, கூட்டு ஆராய்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புத்தாக்கத்தை முன்னெடுப்பதற்கான தளமாக COXBIT செயல்பட்டு வருவதாக அவர் விளக்கினார்.

மேலும், ஆராய்ச்சி மற்றும் Proof–of–Concept நிலையிலிருந்து தொழில்நுட்ப சரிபார்ப்பு, தயாரிப்பு மேம்பாடு மற்றும் வணிகமயமாக்கல் வரை புதுமையான யோசனைகளை முன்னெடுத்துச் செல்ல ஆய்வக வசதிகள், தொழில்நுட்ப நிபுணத்துவம், இன்குபேஷன் ஆதரவு மற்றும் தேவையான பிற வசதிகளை COXBIT வழங்கி வருவதாக முனைவர். ந. செந்தில் தெரிவித்தார்.

PPP முறையின் மூலம் கல்வி நிறுவனங்களில் உருவாகும் ஆராய்ச்சி முடிவுகளுக்கும் தொழில்துறையின் தேவைகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து, ஆராய்ச்சி முடிவுகளை தொழில்நுட்ப அடிப்படையிலான மற்றும் வணிக ரீதியாகச் செயல்படுத்தக்கூடிய தயாரிப்புகளாக மாற்றுவதற்கு COXBIT வழிவகுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***